**குருநாகல் மாவட்டத்தின் 56 கமநலசேவை குழுக்கள் - 2023**

---

## 1. கணக்காய்வு அபிப்பிராயம்

1.1 குருநாகல் மாவட்டத்தின் 56 கமநலசேவை குழுக்களின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்கள் தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க மற்றும் 2000 இன் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி சட்டத்தின் பிரிவு 58(1) இன் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

1.2 2023 ஆண்டு தொடர்பான குருநாகல் மாவட்டத்தின் 56 கமநலசேவை குழுக்கள் தொடர்பான கணக்காய்வு அறிக்கை வெளியிடப்பட்டிருந்ததுடன் அந்த அறிக்கைகளில் 10 குழுக்களின் அபிப்பிராயம் மறுக்கப்பட்டிருந்ததுடன் 46 குழுக்களுக்கு முனைப்பழிப்புள்ள அபிப்பிராயம் வெளியிடப்பட்டது. அதற்கு காரணமாக இருந்த பொருண்மையான வழுக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

### 1.3 நிதிக்கூற்றுக்கள்

### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 55 கமநல சேவைக் குழுக்கள் அமைந்துள்ள 77 ஏக்கர் 01 ரூட் 37 பர்சஸ் இற்கான காணிகள் மற்றும் 08 சமநல சேவைக் குழுக்களின் 40 இயந்திரப் பொறிகள், அலுமாரி ஒன்று, இரும்புப் பெட்டி ஒன்று, 02 குழுக் கட்டிடங்கள், 02 உரக் களஞ்சியங்கள், உத்தியோகபூர்வ வாசஸ்தளம் ஒன்று, 02 விற்பனை நிலையங்கள் மற்றும் 23,484 கி.கி. உரம் என்பவற்றின் பெறுமதியை பெறுமதி மதிப்பீடு நெய்து கணக்கீடு செய்திருக்கவில்லை. | உரித்தாக்கப்பட்டிருக்காத காணிகளை உரித்தாக்குவதற்கும், காணிகள் மற்றும் ஏனைய சொத்துக்களை பெறுமதி மதிப்பீடு செய்து அப்பெறுமதியினை கணக்கீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என. | குழுக்களுக்குரிய அனைத்து சொத்துக்களும் பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | 09 கமநல சேவை குழுக்களில் ரூபா 663,010 தொகை வருமானமும் 07 குழுக்களில் ரூபா 370,327 தொகைக்கான நடைமுறைச் சொத்துக்கள் மற்றும் 02 குழுக்களின் ரூபா 663,402 தொகைக்கான நடைமுறைப் பொறுப்புக்களும் மீளாய்வாண்டின் போது கணக்குகளில் இருந்து கைவிடப்பட்டிருந்தது. | குறிப்பிட்ட சீராக்கல்கள் மேற்கொள்ளப்பட்டு சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது மீளாய்வாண்டிற்குரிய வருமானங்கள் மற்றும் செலவுகளை, சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 12 கமநல சேவைக் குழுக்களின் முன்னைய ஆண்டிற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 351,648 இற்கான செலவுகள் மீளாய்வாண்டிற்கான செலவுகள் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | குறிப்பிட்ட சீராக்கல்கள் மேற்கொள்ளப்பட்டு சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | கணக்கு ஆண்டிற்குரிய செலவுகள் சரியாக சீராக்கல் செய்து நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 09 கமநல சேவைக் குழுக்களின் ரூபா 1,236,908 இற்கான வருமானமும், 23 குழுக்களின் ரூபா 584,202 இற்கான செலவுகளும், 11 குழுக்களின் ரூபா 1,192,283 இற்கான நடைமுறைச் சொத்துக்களும் மீளாய்வாண்டின் போது மிகையாக கணக்கீடு செய்திருந்ததுடன், 15 கமநல சேவைக் குழுக்களின் ரூபா 1,957,773 இற்கான வருமானங்களும், 09 குழுக்களின் ரூபா 30,788,958 இற்கான செலவுகளும், 19 குழுக்களின் ரூபா 89,662,499 இற்கான நடைமுறைச் சொத்துக்களும், 03 குழுக்களுக்கான ரூபா 111,297 இற்கான நடைமுறைப் பொறுப்புக்களும் மீளாய்வாண்டின் போது குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | குறிப்பிட்ட சீராக்கல்கள் மேற்கொள்ளப்பட்டு சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது கணக்காண்டிற்குரிய வருமானங்கள் மற்றும் செலவுகள் முழுமையாக மற்றும் சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | 04 குழுக்களினால் கணக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா 457,845 இற்கான இருப்பு விடயங்கள் மற்றும் 09 குழுக்களினால் செய்யப்பட்டிருந்த ரூபா 5,186,538 தொகை பெறுமதியான 12 நிலையான சொத்து அலகுகள் மற்றும் 05 இருப்பு வகைகள் பௌதீக ரீதியாக காணப்படவில்லை. | பௌதீக ரீதியாக காணப்படாத இந்த சொத்துக்களை கணக்குகளிலிருந்து அகற்றுவதற்காக உரிய குழுக்களுக்கு அறிவுரை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | முறையான விசாரணை மேற்கொண்டு காரணங்களை கண்டறிதல் மற்றும் அதன்படி நிதிக்கூற்றுக்களில் பொருத்தமானவாறு சீராக்கல் மேற்கொள்ள வேண்டும். |
| (ஊ) | 14 கமநல சேவைக் குழுக்கள் மற்றும் கமநல சேவை வங்கிகளுக்கு கணினி மென்பொருள் முறைமையொன்று நிறுவுவதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 2,718,870 இற்கான தொகையொன்று செலுத்தப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது அந்த முறைமை நிறுவப்பட்டிருக்காமையால் | முற்பணக் கொடுப்பனவு என கணக்கீடு செய்து சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | செலுத்தப்பட்ட முற்பணம் என கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

செலுத்தப்பட்டிருந்த தொகை முற்பணம் ஒன்றென கணக்கீடு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், அதனை திரண்ட நிதியத்திற்கு மற்றும் வங்கி நிதியத்திற்கு பதிவழிக்கப்பட்டிருந்தது.

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 24 கமநல சேவை குழுக்களில் 96 கணக்கு விடயங்கள் தொடர்பாக நிதிக் கூற்றுக்கள் மற்றும் துணை அறிக்கைகளும் ஒப்பீடு செய்யும் போது கூட்டுத்தொகை ரூபா 36,859,840 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. | மீதிகளை மீண்டும் பரிசோதனை மேற்கொண்டு சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | இணக்கஞ் செய்யப்படாத மீதிகளை இணக்கம் செய்து சரியான பெறுமதிகள் நிதிக்கூற்றுக்களில் சீராக்கல் செய்யப்பட வேண்டும். |

### 1.3.3 போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 17 கமநல சேவை குழுக்களில் ரூபா 438,266,722 தொகை பெறுமதியான 542 நாட்குறிப்புக்களுக்காக முறையான அங்கீகாரம் பெற்றிருக்கவில்லை. 04 குழுக்களினால் நாட்குறிப்பு பதிவுகள் தயாரித்திருக்காததுடன், ஒரு குழுவினால் ஆரம்ப மீதிகளுக்கு மாத்திரம் நாட்குறிப்புகள் தயாரிக்கப்பட்டிருந்தது. | முறைப் பிரகாரம் அங்கீகாரம் பெற்றுக்கொண்டு சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | முறையான அங்கீகாரத்துடனான நாட்குறிப்பு பதிவுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டியதுடன் ஆரம்ப மீதிகள் மற்றும் சீராக்கல்களுக்காக நாட்குறிப்பு பதிவுகள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 04 கமநல சேவைக் குழுக்களினால் முறையான அங்கீகாரம் இன்றி ரூபா 908,593 தொகை பெறுமதியான 04 வரவு மீதிகளும், ரூபா 384,537 தொகை பெறுமதியான 02 செலவு மீதிகளும் திரண்ட நிதியத்திற்கு பதிவழிக்கப்பட்டிருந்தது. | முறைப் பிரகாரம் அங்கீகாரம் பெற்றுக்கொண்டு சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | பதிவழித்தல் மற்றும் திரண்ட நிதியத்திற்கு சீராக்கல் மேற்கொள்வதற்காக முறையான அங்கீகாரம் ஒன்று பெற்றுக்கொள்ள வேண்டும். |

### 1.3.4 தொங்கல் கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு 03 கமநல சேவைக் | பரிசோதனை மேற்கொண்டு சரி செய்வதற்கு நடவடிக்கை | கணக்கு மீதிகள் சரி செய்யப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| குழுக்களினால் 18 வருடங்களுக்கும் 19 இற்கும் இடைப்பட்ட காலம் முதல் முன்கொண்டு வரப்பட்டிருந்த தொங்கல் கணக்கின் வரவு மற்றும் செலவு மீதிகள் முறையே ரூபா 504,820 தொகை மற்றும் ரூபா 25,654 தொகை காணப்பட்டது. | எடுக்கப்படும் என. | |

### 1.3.5 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு 50 கமநல சேவைக் குழுக்களின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கூட்டுத்தொகை ரூபா 302,528,373 இற்கான 198 சொத்து விடயங்கள் மற்றும் கூட்டுத்தொகை ரூபா 232,877,312 இற்கான 104 பொறுப்பு விடயங்கள் தொடர்பான விரிவான பதிவுகள் பெறுமதி மதிப்பீட்டு அறிக்கை, மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள், உரிய சொத்துப் பதிவேடுகள் மற்றும் உரிமைச் சான்றிதழ்கள் போன்ற சான்றுகள் காணப்படாமையால் அந்த கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதி செய்வதற்கு முடியாதிருந்தது. | கணக்கீடு தொடர்பாக போதிய அறிவு காணப்படாத கூடிய எண்ணிக்கையான உத்தியோகத்தர்களை பயன்படுத்தி நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டது எனவும், எதிர் காலத்தில் குறைபாடுகளை குறைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் எனவும். | கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துவதற்கு ஆவணங்கள் பேணிச் செல்லப்பட வேண்டும். |

### 1.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| **(அ)** | **2000 இன் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி சட்டம்** | | | |
| (i) | பிரிவு 14(3) | சச்சரவுகள் காணப்படும் வயல்களில் வாரப் பயிர் செய்வோர்களினால் காணி உரிமையாளர்களுக்கு செலுத்துவதற்காக சபையில் வைப்புச் செய்யப்பட்டிருந்த காணி உரிமை பங்கு ரூபா 1,664,575 தொகை 11 கமநல சேவைக் குழுக்களினால் காணி உரிமையாளர்களுக்கு | சச்சரவுகள் காணப்படும் வாரப் பயிர்ச் செய்வோருக்கு கொடுப்பனவு செய்ய முடியாது காணப்படும் வாரப் பயிர்ச் செய்கைப் பணம் விரைவாக நீதிமன்றில் வைப்புச் செய்வதற்கு நடவடிக்கை | கமநல அபிவிருத்தி சட்டத்தின் ஏற்பாடுகளின் படி நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | செலுத்துதல் அல்லது நீதிமன்றில் வைப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமல் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி அளவிலும் குழுவின் நிதியத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது. | எடுக்கப்படும் என. | |
| (ii) | பிரிவு 52 | அனைத்து போகங்களுக்கு முன்னர் கமநல சேவைக் குழுக்களின் அதிகாரப் பிரதேசத்திற்காக விவசாய நிகழ்ச்சித் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 50 குழுக்களினால் அதன் படி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டு மற்றும் பாதீட்டு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு அங்கீகாரத்துடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | கமநல அபிவிருத்தி சட்டத்தின் ஏற்பாடுகளின் படி நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (iii) | பிரிவு 53(4) | அனைத்து 03 வருடங்களுக்கு ஒரு முறை காணிப் பெயர்ப் பதிவேடு திருத்தப்பட வேண்டியிருந்த போதிலும், அனைத்து கமநல சேவை குழுக்களினால் அதன் படி செயற்பட்டிருக்கவில்லை. | கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் கட்டளைகள் மீது சீர்த்திருத்தல்கள் மற்றும் திருத்த அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு நாளதுவரை ஆக்கப்படும் என. | கமநல அபிவிருத்தி சட்டத்தின் ஏற்பாடுகளின் படி நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| **(ஆ)** | **இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை** | | | |
| (i) | நிதிப் பிரமாணம் 137 | சேவைகள், வேலைகள் அல்லது வழங்கல்கள் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன், அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரான குழுவின் தலைவரினால் அனைத்து கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்களும் அங்கீகரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 06 கமநல சேவைக் குழுக்களினால் 111 சந்தர்ப்பங்களில் ரூபா 2,035,099 இற்காக உறுதிச் சீட்டுக்கள் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. | தேவையான அறிவுரைகள் வழங்கப்பட்டு சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (ii) | நிதிப் பிரமாணம் 237(ஆ) | களஞ்சிய வழங்களுக்காக கொடுப்பனவு மேற்கொள்ளும் போது பண்டங்கள் கிடைக்கப் பெற்றுள்ளதென உறுதிப்படுத்தி, | குறைபாடுகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | - மேற்படி - |

| | | | | |
|---|---|---|---|---|
| | | குறிப்பிட்ட பண்டங்களை பண்டப் பதிவேட்டில் உட்படுத்தப்பட்டது என குறிப்பிடப்பட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது ரூபா 2,703,072 இற்குரிய கொள்வனவுகள் தொடர்பாக 09 கமநல சேவைக் குழுக்களினால் நிதிப் பிரமாண ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட்டிருக்கவில்லை. | | |
| (iii) | நிதிப் பிரமாணம் 264 | அனைத்து கொடுப்பனவுகளிலும் உறுதிச் சான்றுகளில் குறிப்பிடப்பட்டுள்ள மொத்த தொகை பெற்றுக் கொள்ளப்பட்டது என பெறுவோரிடம் பெற்றுக் கொள்ளப்பட்ட பற்றுச் சீட்டொன்றின் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது ரூபா 118,132,779 தொகை பெறுமதியான 266 கொடுப்பனவு உறுதிச்சான்றுகள் தொடர்பான 19 கமநல சேவை குழுக்களினால் அதன்படி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | குறைபாடுகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | - மேற்படி - |
| (iv) | நிதிப் பிரமாணம் 880 மற்றும் 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 இலக்கங் கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கையின் பகுதி II பிரிவு 09 | பணம் அல்லது இருப்பு தொடர்பாக செயற்படுவதற்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள அனைத்து உத்தியோகத்தர்களினாலும் பிணை வைக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 51 கமநல சேவைக் குழுக்களின் விவசாய ஆய்வு மற்றும் உற்பத்தி உதவியாளர்கள் பிணை வைத்திருக்காததுடன், கமநல அபிவிருத்தி ஆணையாளரின் 2023 பெப்ரவரி 13 திகதிய DAD/KNG/EST/5/ARPA/17 இலக்கம் கொண்ட சுற்றறிக்கையின் மூலம் மேற்கூறிய நிதிப் பிரமாணத்திற்கு இணக்கமின்றி | சுற்றறிக்கைக்கு இணங்க விவசாய ஆய்வு மற்றும் உற்பத்தி உதவியாளர்கள் பிணை வைப்பிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர் என. | நிதிப் பிரமாணம் 880 மற்றும் 01/2020 இலக்கம் கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கையின் படி செயற்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வி.ஆ.உ.உ. உத்தியோகத்தர்கள் பிணை வைப்பிலிருந்து விடுவிக்கப்பட்டிருந்தனர். | | |

**(இ) கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் சுற்றறிக்கைகள்**

| | | | | |
|---|---|---|---|---|
| (i) | 1988 மே 22 திகதிய கமநல சேவை ஆணையாளரின் 322 ஆம் இலக்க சுற்றறிக்கை | காணி உரிமையின் வாரப் பயிர்ச்செய்கை பங்குத் தொகையை பெற்றுக் கொண்ட நாள் முதல் 14 நாட்களுக்குள் உரிய நபர்களுக்கு கொடுப்பனவு செய்யப்பட வேண்டியதுடன் ஒரு வருட காலத்தினுள் அந்த பணத்தை பெற்றுக் கொள்ளாவிடின் மற்றும் உரிமையாளர்கள் பலர் காணப்படும் போது உரிமையாளர்கள் தெளிவில்லாத உரிமைப் பங்கு தொகை நீதிமன்றத்தில் வைப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2 கமநல சேவை குழுக்களில் நீண்டகாலம் முதல் முன்கொண்டு வரப்பட்டிருந்த ரூபா 1,638,418 இற்கான காணி உறுதி வாரப் பயிர்ச் செய்கை பங்குத் தொகை தொடர்பாக அவ்வாறு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எதிர் காலத்தில் சுற்றறிக்கைக்கு இணங்க செயற்படுத்தப்படும் என. | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ii) | 2012 பெப்ரவரி 29 ஆம் திகதிய 04/2012 இலக்கம் கொண்ட சுற்றறிக்கையின் பந்தி 5.6(i) | கமநல வங்கிகள் கமநல குழுக்களின் அலகொன்றாக காணப்படுவதனால் கமநல வங்கி தொடர்பான அனைத்துக் கணக்குகளும் கமநல சேவைக் குழுக்களின் வருடாந்த கணக்குகளுக்கு உட்படுத்தப்பட்டு ஒன்றித்தி நிதிக்கூற்றொன்று தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 56 குழுக்களினாலும் அவ்வாறு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கமநல சேவை ஆணையாளர் நாயகத்தின் அறிவுரையின் படி தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | - மேற்படி - |
| (iii) | 2014 ஆகஸ்ட் 22 திகதிய 07/2014 (107 திருத்தம் iii) | நாளாந்தம் குழு எழுதுனரின் கையில் தடுத்து வைக்கக்கூடிய உச்ச மட்ட தொகை ரூபா 10,000 தொகை எனினும், 20 | சரியாக செயற்படுவதற்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட |

| | | | | |
|---|---|---|---|---|
| | இலக்கம் கொண்ட சுற்றிக்கை | கமநல சேவைக் குழுக்களினால் 885 சந்தர்ப்பங்களில் அதைவிட கூடிய தொகையொன்று கையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது. | என. | வேண்டும். |
| (iv) | 2016 இன் பெப்ரவரி 09 திகதிய 03/2016 இலக்கம் கொண்ட சுற்றறிக்கை | ஒரு வருடத்திற்கு குறைந்தளவு நான்கு தடவைகள் ஏனும், விவசாய ஆய்வு மற்றும் உற்பத்தி உதவியாளர்களும் ஒரு வருடத்திற்கு குறைந்தளவு ஒரு தடவையேனும் நிறைவேற்றச் செயலாளரும் விவசாய அமைப்புக்களை பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும், 08 கமநல சேவைக் குழுக்களின் அதிகார பிரதேசத்தை சேர்ந்த 276 செயற்படு விவசாய அமைப்புக்களினால் அவ்வாறு செயற்பட்டிருப்பதற்கான சான்றுகள் குழுவினால் உறுதிப்படுத்தப்படவில்லை. | குறிப்பிட்ட உத்தியோகத்தர்களை அறிவுறுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என. | - மேற்படி - |
| (v) | 2019 ஒக்தோபர் 22 திகதிய 07/12/05/04 இலக்கம் கொண்ட கடிதம் மற்றும் 2020 ஒக்தோபர் 08 திகதிய 09/2020 இலக்கம் கொண்ட சுற்றறிக்கை | அனைத்து பதிவு செய்யப்பட்ட விவசாய அமைப்புக்களின் கொடுக்கல் வாங்கல்கள் குறிப்பிட்ட கமநல வங்கயின் சேமிப்புக் கணக்கொன்றின் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும், 684 விவசாய அமைப்புக்களில் 195 அமைப்புக்கள் கமநல வங்கிக் கணக்கு ஆரம்பித்திருக்கவில்லை. | செய்முறை ரீதியான சிரமங்கள் காரணமாக விவசாய அமைப்புக்களினால் கமநல வங்கியில் பணம் வைப்புச் செய்ய விருப்பமொன்று காட்டப்படவில்லை என. | - மேற்படி - |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் படி 2023 ஆண்டில் 56 கமநல சேவைக் குழுக்களின் கூட்டுத்தொகை ரூபா 29,659,057 இற்கான தேறிய மிகையொன்றும், 56 கமநல வங்கிகளின் கூட்டுத்தொகை ரூபா 23,195,296 இற்கான மிகையொன்றும் காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப 2022 ஆண்டில் 56 கமநல சேவைக் குழுக்களின் கூட்டுத்தொகை ரூபா 22,235,476 இற்கான தேறிய மிகையொன்றும், 56 கமநல வங்கிகளின் கூட்டுத்தொகை ரூபா 14,306,012 இற்கான மிகையொன்றும் காணப்பட்டது.

### 2.1.1 பகுப்பாய்வு ரீதியான மீளாய்வு

i. மீளாய்வாண்டில் 52 கமநல சேவைக் குழுக்களில் ரூபா 30,415,250 தொகைக்கான மிகையொன்று பெற்றிருந்ததுடன், அதற்கு ஒப்பாக முன்னைய ஆண்டில் 51 கமநல சேவைக் குழுக்களின் மிகை ரூபா 23,250,111 தொகை காணப்பட்டது. அதன்படி, ரூபா 7,165,139 தொகை மிகையில் அதிகரிப்பொன்று காணப்பட்டது. மீளாய்வாண்டு 04 குழுக்களின் பற்றாக்குறை ரூபா 756,193 தொகையாக காணப்பட்டதுடன், அதற்கொப்பாக முன்னைய ஆண்டில் 05 குழுக்களின் பற்றாக்குறை ரூபா 1,014,635 தொகை காணப்பட்டது.

ii. உரம், விவசாய இரசாயனப் பொருட்கள், விதைகள் மற்றும் கன்றுகள், விவசாய உபகரணங்கள் உட்பட விவசாய பண்டங்களை விற்பனை செய்தலாக காணப்படுவதுடன், மீளாய்வாண்டு தொடர்பாக 56 கமநல சேவைக் குழுக்களின் மொத்த விற்பனை வருமானக் கூட்டுத்தொகை ரூபா 210,691,361 தொகையும் முழு மொத்த இலாபத்தின் கூட்டுத்தொகை ரூபா 7,661,969 தொகையும் காணப்பட்டது. அதன்படி, 56 கமநல சேவைக் குழுக்களின் ஒட்டுமொத்த மொத்த இலாப வீதாசாரம் 4 சதவீதமாக காணப்பட்டது.

iii. சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் படி மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 56 கமநல சேவைக் குழுக்களின் நிதி நிலைமை தொடர்பாக தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | ரூபா |
|---|---|---|
| ➢ திரண்ட நிதியப் பெறுமதி (தேறிய சொத்துக்கள்) | = | 379,473,683 |
| ➢ நீண்ட கால கடன் பெறுமதி | = | 30,362,741 |
| ➢ நடைமுறைப் பொறுப்புக்கள் | = | 1,315,828,830 |
| ➢ மொத்தப் சொத்துக்கள் | | |
| • நடைமுறைச் சொத்துக்கள் | = | 1,470,834,614 |
| • நடைமுறை அல்லாத சொத்துக்கள் | = | 254,830,640 |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 மிகைப் பணம் முதலீடு செய்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 56 கமநல சேவைக் குழுக்களினால் மற்றும் 56 கமநல வங்கிகளினால் கூட்டுத்தொகை ரூபா 91,606,818 தொகையினை ஆக்கபூர்வமாக முதலீடு செய்யப்படாமல் 02 அரச வணிக வங்கிகளில் நடைமுறைக் கணக்குகளில் தடுத்து வைக்கப்பட்டிருந்ததுடன், கூட்டுத்தொகை ரூபா 102,467,018 இற்கான தொகையொன்று குறைந்த வட்டி வருமானம் கிடைக்கக்கூடிய சேமிப்பு வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. அதன்படி, மிகைப் பணம் ஆக்கபூர்வமாக முதலீடு செய்திருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. | நிதியம் செயற்திறனுள்ள முதலீட்டு வழியொன்றில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிதியம் மிகச் செயற்திறனுள்ள முதலீட்டு வழிகளில் ஈடுபடுத்த வேண்டும். |

### 3.2 இனங்காணப்படாத நட்டங்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மாவத்தகம கமநல சேவைக் குழுவில் 2020 ஆண்டு தொடர்பாக இனங்காணப்பட்டிருந்த இருப்புப் பற்றாக்குறைக்காக அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 771,097 தொகை மீளாய்வாண்டின் போதும் குறிப்பிட்ட தரப்பினரிடம் அறவீடு செய்திருக்கவில்லை. | விசாரணை அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என. | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்து அறவிடப்பட வேண்டிய தொகைகளை விரைவாக அறவிட வேண்டும். |
| (ஆ) | ரம்பே கமநல சேவைக் குழுவில் 1999 ஆண்டிற்கு முன்னர் விவசாய ஆய்வு உற்பத்தி உதவியாளர் (வி.ஆ.உ.உ.) உத்தியோகத்தர் ஒருவரினால் கமநல வங்கிப் பணம் மற்றும் ஏக்கர் வரிப் பணம் தவறாக பயன்படுத்தப்பட்டு மேற்கொள்ளப்பட்டிருந்த நீர் மோசடி தொடர்பாக அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 137,706 தொகையினை அறவீடு செய்வதற்கு மீளாய்வாண்டின் போது நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தொடர் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என. | - மேற்படி - |
| (இ) | நாதகனே கமநல வங்கியினால் சரியாக காசேடு சமப்படுத்தப்படாமை, கடன்கள் வழங்கும் போது காசோலைகள் முறைகேடாக பயன்படுத்தல், பேரேட்டில் பதியப்படாத கடன் தொகைகள் மற்றும் அற்குரிய வட்டித் தொகைகள் என கமநல வங்கியின் 2020 ஜனவரி 01 முதல் 2021 ஜூலை 05 காலப் பகுதி தொடர்பாக நடைபெற்றிருந்த கொடுக்கல் வாங்கல்களின் மூலம் கூட்டுத்தொகை ரூபா 2,954,156 தொகைக்கான பற்றாக்குறையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்காததுடன், 06 பற்றுச்சீட்டுப் புத்தகங்கள் காணாமல் போயிருந்ததுடன், அந்தப் பற்றுச்சீட்டுக்கள் தொடர்பான கொடுக்கல் வாங்கல்களும் பதிவு செய்தும் இருக்கவில்லை. | விசாரணை அலுவலகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என. | - மேற்படி - |
| (ஈ) | தாரண கமநல வங்கியின் பேரேட்டை பரிசோதனை செய்த போது கண்டறியப்பட்ட ரூபா 3,310,450 இற்கான நிதி மோசடியிலிருந்து மேலும் அறவிடப்பட வேண்டிய மீதி ரூபா 2,523,592 தொகையாக காணப்பட்டதுடன், மீளாய்வாண்டின் | விசாரணை அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என. | - மேற்படி - |

போது அதனை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**3.3 முகாமைத்துவத் திறமையின்மை**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 11 கமநல சேவைக் குழுக்களில் நிறுவப்பட்டிருந்த 358 விவசாய அமைப்புக்களில் 17 அமைப்புக்கள் செயற்படாது காணப்பட்டதுடன், நிறுவப்பட்டிருந்த 117 சிந்திப்போம் மகளிர் விவசாய அமைப்புக்களில் 32 அமைப்புக்கள் செயற்படு நிலையில் காணப்படவில்லை. | செயற்படாத சங்கங்களை செயற்படு நிலைக்கு நாடாத்திச் செல்வதற்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது என. | விவசாய அமைப்புக்களை செயற்படு மட்டத்தில் பேணிச் செல்வதற்கான வேலைத் திட்டமொன்று தயாரித்து செயற்படுத்த வேண்டும். |
| (ஆ) | சொத்துக்களை தனதாக்கல் தொடர்பாக நீண்ட காலம் முதல் செலுத்த வேண்டிய கடன் என முன்கொண்டு செல்லப்படும் 13 கமநல சேவைக் குழுக்களில் ரூபா 7,892,993 இற்கான கடன் கொடுத்தோர் மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்காததுடன், இந்த கடன் மீதி தொடர்பான அனேக சொத்துக்கள் குழுவில் பௌதீக ரீதியாக காணப்பட்டவில்லை. | தலைமை அலுவலகத்திலிருந்து அறிவுரை பெற்றுக்கொண்டு தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | செலுத்த வேண்டிய கடன் மீதிகளை தீர்ப்பதற்கும், சொத்துக்கள் பௌதீக ரீதியாக காணப்படாத காரணங்களை விசாரணை செய்து முறைப்படுத்துவற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 22 கமநல சேவைக் குழுக்களில் நெற்பயிர்ச் செய்கைக்காக ஈடுபடுத்தக்கூடிய A தரத்தை சேர்ந்த தரிசு வயல்களின் எண்ணிக்கை சுமார் 384 ஏக்கர்கள் 38 ரூட் 13 பர்சஸ் ஆக காணப்பட்டதுடன், 11 கமநல சேவைக் குழுக்களின் நெற் பயிர்ச்செய்கை அல்லாத ஏனைய பயிர்களை பயிர் செய்கையில் ஈடுபடுத்தக்கூடிய B தரத்தை சேர்ந்த தரிசு வயல்கள் எண்ணிக்கை 146 ஏக்கர் 03 ரூட் 28 பர்சஸ் அளவும் 19 கமநல சேவைக் குழுக்களில் C தரத்தைச் சேர்ந்த தரிசு வயல் நிலங்களின் எண்ணிக்கை 725 ஏக்கர் 01 ரூட் 07 பர்சஸாக காணப்பட்டது. இந்த தரிசு வயல் நிலங்களை நெற்பயிர்ச் செய்கைக்கு அல்லது ஏனைய பயிர்ச் செய்கைகளுக்கு ஈடுபடுத்துவதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தரிசு வயல் நிலங்ளை விளைச்சல் பெறுவதற்காக உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன என. | கமநல அபிவிருத்திச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க அனைத்து பயிர் செய்கைக் காணிகளும் உரிய முறையில் பயிர் செய்கைக்காக பயன்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | உத்தியோகத்தர்கள் அலுவலகத்திற்கு உள்வருதல் மற்றும் வெளிச் செல்லலை பதிவு செய்வதற்காக 2020 ஆண்டின் போது ஒன்று ரூபா 54,275 வீதம் ரூபா 3,039,400 தொகை செலவிடப்பட்டு விரல அடையாள இயந்திரங்கள் கொள்வனவு செய்திருந்த போதிலும், 11 கமநல சேவைக் குழுக்களின் அந்த இயந்திரங்கள் செயற்படாது இருந்ததுடன், அந்த இயந்திரங்களின் மூலம் அச்சுப் பிரதிகள் பெற்றுக்கொள்ள முடியாமையால் அவற்றின் மூலம் எதிர்பாரக்கப்பட்ட பெறுபேறுகளை பெற்றுக்கொள்ள முடியாமல் இருந்தது. | இயந்திரங்களை செயற்படு நிலைக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சுற்றறிக்கைகளுக்கு இணங்க உள்வருதல் மற்றும் வெளிச்செல்லலை உறுதிப்படுத்துவதற்கு விரல் அடையாள இயந்திரம் பயன்படுத்த வேண்டும். |
| (உ) | 13 கமநல சேவைக் குழுக்களினால் 2002 ஆண்டு முதல் 2022 ஆண்டு வரையான காலப் பகுதிக்குரிய கூட்டுத்தொகை ரூபா 341,326 இற்கான கணக்காய்வுக் கட்டணம் அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. | 2024 ஆண்டில் ரூபா 14,400 தொகை செலுத்தப்பட்டிருந்தது என. | நிலுவை கணக்காய்வுக் கட்டணங்களை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.4 செயற்பாட்டுத் திறமையின்மை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பல வருட காலம் முதல் முன்கொண்டு வந்து காணப்படும் 30 கமநல சேவைக் குழுக்களின் ரூபா 30,062,249 இற்கான 266 பெற வேண்டிய மீதிகளை அறவீடு செய்வதற்கும் ரூபா 25,543,033 இற்கான 277 செலுத்த வேண்டிய மீதிகளை தீர்ப்பதற்கும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிதிக்கூற்றுக்களில் தொடர்ச்சியாக காணப்படுகின்ற பெற வேண்டிய மீதிகள் மற்றும் செலுத்த வேண்டிய மீதிகளை தீர்ப்பதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.5 விளைவற்ற அல்லது குறைபயன்பாட்டு ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 28 கமநல சேவைக் குழுக்களில் 03 டிரக்டர் வண்டி மற்றும் உபகரணங்கள், 06 புல் தூளாக்கும் இயந்திரங்கள், 03 புல் வெட்டும் இயந்திரங்கள், 03 களஞ்சியங்கள், நீர்த்துளி முறைமை ஒன்று, 21 கன்றுகள் நடும் இயந்திரங்கள், 15 | அப்புறப்படுத்துவதற்கு அல்லது செயற்படு நிலைக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | பயன்படுத்தக் கூடிய சொத்துக்கள் மற்றும் உபகரணங்களை முழுமையாக பயன்படுத்துவதற்கும் ஏனைய சொத்துக்கள் மற்றும் |

| | | |
|---|---|---|
| களை எடு இயந்திரங்கள், 03 விதைகள் நடும் இயந்திரங்கள், 14 கன்று குடில்கள் மற்றும் வலை வீடுகள், 03 சுவர் இரும்புப் பெட்டிகள், 01 தரைத் தராசு, 03 விற்பனை நிலையங்கள், 06 இயந்திர உபகரணங்கள், 05 விரலடையாள இயந்திரங்கள், 05 கணினிகள், 02 பெக்ஸ் இயந்திரங்கள், தொலைக்காட்சிப் பெட்டியொன்று, தண்ணீர் தொட்டியொன்று, 03 மல்டி சொபர்கள், 04 விதை விதைக்கும் இயந்திரங்கள், இயந்திரமய கன்று நடும் இயந்திரமொன்று, நிழல்பிரதி இயந்திமொன்று, 5,524 விவசாய உகரணங்கள், பால் விற்பனை நிலையக் கட்டிடம் மற்றும் உபகரணங்கள், வானிலை அலகிற்கு சொந்தமான டெப் இயந்திரம், காலாண் விதை உற்பத்தி நிலையம் மற்றும் அதற்குரிய உபகரணங்கள், வெதுப்பகமும் அதற்குரிய உகரணங்களும் மற்றும் 139 நீர்மட்ட அளவை மாணி விளைவற்று மற்றும் குறை பயன்பாட்டுடன் காணப்பட்டது. | | உபகரணங்களை முறைப் பிரகாரம் அப்புறப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.6 செயற்திட்டங்கள் அல்லது மூலதன வேலைகளில் தாமதங்கள்**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| 51 கமநல சேவைக் குழுக்களில் 5,495 சிறு அளவிலான நீர்ப்பாசனக் குளங்களும், 937 அணைக் கட்டுக்கள் மற்றும் 362 அருவிப் பாதைகள், பக்கச் சுவர்களும் மீளாய்வாண்டின் போது மறுசீரமைப்பதற்காக முக்கியத்துவ அடிப்படையில் தயாரிக்கப்பட்ட 583 செயற்திட்டங்கள் சமர்ப்பிக்கபட்டிருந்த போதிலும் 25 செயற்திட்டங்கள் மாத்திரம் செயற்படுத்தப்பட்டிருந்தது. | ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என. | நீர்ப்பாசன வேலைகள் மற்றும் நீர்ப்பாசன மீளமைப்பு அலுவல்கள் மற்றும் நிர்மாண வேலைகள் அலுவல்கள் நாளதுவரையாக மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக 56 கமநல சேவைக் குழுக்களுக்கான செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், | வருடாந்த முன்னேற்றத்தை உள்ளடக்கி செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிப்பதற்கு நடவடிக்கை | காலாண்டிற்கான முன்னேற்ற அறிக்கைகள் தயாரிக்கப்பட |

| | | |
|---|---|---|
| அதற்குரிய முன்னேற்ற அறிக்கைகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | எடுக்கப்படும் என. | வேண்டும். |

## 4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக 56 குழுக்களினால் தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டு மதிப்பீட்டின் படி 755 வருமானம் மற்றும் செலவு விடயங்கள் தொடர்பாக 01 சதவீதம் முதல் 9,058 வரை முரண்கள் காணப்பட்டது. அதன் காரணமாக கட்டுப்பாட்டுச் செய்முறையொன்றாக பயன்படுத்தப்படும் பாதீடு குழுவினால் ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டு வழிமுறையொன்றாக பயன்படுத்தியிருக்கவில்லை. | கட்டுப்படுத்த முடியாத காரணங்களினால் பாதீட்டு முரண்கள் ஏற்பட்டிருந்தது. | பாதீட்டு மதிப்பீடு ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டு வழிமுறை ஒன்றை பயன்படுத்தப்பட வேண்டும். |

## 5. கமநல வங்கிகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கனேவத்த கமநல வங்கியினால் மூலதனத் தொகைக்காக வட்டி செலுத்தத் தாமதம் ஏற்பட்டதனால் மீளாய்வாண்டிற்காக ரூபா 140,849 தொகை தண்ட வட்டி என செலுத்தப்பட்டிருந்தது. | தொழிற்படு மூலதனம் காணப்படாமையால் குறிப்பிட்ட காலத்தில் தீர்க்க முடியாமல் போனது. | குறிப்பிட்ட காலத்தில் வட்டி செலுத்துதல் மேற்கொள்ள வேண்டும். |
| (ஆ) | 06 கமநல வங்கிகளில் ரூபா 119,705,130 தொகை பெறுமதியான 77 நாட்குறிப்புப் பதிவுகளுக்காக முறையான அங்கீகாரமொன்று பெற்றிருக்கவில்லை. | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நாட்குறிப்புப் பதிவுகளுக்காக முறையான அங்கீகாரம் பெற்றுக்கொள்ள வேண்டும். |
| (இ) | 02 கமநல வங்கிகளில் ரூபா 1,229,550 தொகை பெறுமதியான பங்கு வைப்புக்களுக்காக பேரேட்டுக் கணக்குகள் பேணிச் சென்றிருக்கவில்லை. | பதிவேடுகள் நாளதுவரை ஆக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | பேரேட்டுக் கணக்குகள் உரிய முறையில் பேணிச் செல்ல வேண்டும். |
| (ஈ) | 18 கமநல வங்கிகளில் 43,055 பங்கு வைப்புக் கணக்குகளில் 29,021 தொகையும், 13 கமநல வங்கிகளில் 25,007 பொது வைப்புக் கணக்குகளில் 14,563 தொகையும், 29 கமநல வங்கிகளில் 2,809 சிறுவர் | வைப்புக்களை அதிகரிப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்படும் என. | கணக்குகளை செயற்படு நிலையில் பேணிச் செல்வதற்காக வேலைத் திட்டமொன்று தயாரித்து செயற்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வைப்புக் கணக்குகளில் 1,631 தொகையும், 19 கமநல வங்கிகளில் 3,644 விவசாய அமைப்பு வைப்புக் கணக்குகளில் 1,341 தொகையும், 22 கமநல வங்கிகளில் 1,746 சிறு குழும வைப்புக்களில் 877 தொகையும், 15 கமநல வங்கிகளில் 492 சிந்திப்போம் மகளிர் கணக்குகளில் 133 தொகையும் செயற்படு நிலையில் காணப்படாமல் ஆரம்ப வைப்புக்களுக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டிருந்தது. | | |
| (உ) | 31 கமநல வங்கிகளில் மீளாய்வாண்டின் போது ஒரு மாதத்தில் நடைபெற்ற கொடுக்கல் வாங்கல்களை பரிசோதனை செய்த போது நாலாந்தம் மேற்கொண்டிருந்த வங்கிக் கொடுக்கல் வாங்கல்களின் சராசரி 01 இற்கும் 14 இற்கும் இடைப்பட்ட மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. | குறைந்த தொழில்நுட்ப வசதியின் கீழ் வாடிக்கையாளர்களை பங்குபடுத்திக்கொள்ளலின் இயலுமை குறைவாக இருந்தது. | கொடுக்கல் வாங்கல்களை அதிகரித்துக்கொள்வதற்காக வேலைத் திட்டமொன்று செயற்படுத்த வேண்டும். |
| (ஊ) | 50 கமநல வங்கிகளின் ஆரம்பம் முதல் 2021 வரை வழங்கியிருந்த கடன் தொகை ரூபா 107,580,997 தொகை 2,999 கடன்பட்டோர்களிடம் அறவீடு செய்திருக்கவில்லை. | அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சுற்றறிக்கைக்கு இணங்க கடன் தொகையை குறிப்பிட்ட காலத்தில் அறவீடு செய்ய வேண்டும். |